# MANIDHANAEYAM FREE IAS ACADEMY – TNPSC GROUP II & IIA
# UNIT – II-ADMINISTRATION

## தமிழ்நாடு அரசின் திட்டங்கள்

### 1. தொட்டில் குழந்தை திட்டம்

1. 1991-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, மாநிலத்தின் சில பகுதிகளில் பெண்சிசுக்கொலை தொடர்பான பழக்கவழக்கங்களால் குழந்தை பாலின விகிதம் வெகுவாக குறைந்ததை பிரதிபலித்தது. இதற்கு பல்வேறு சமூக பொருளாதார காரணங்கள் உள்ளன.
2. சமூகத்தில் நிலவும் இத்தகைய மோசமான பழக்கவழக்கங்களுக்கு வறுமை, வரதட்சணை கொடுமை, திருமணமாகாத பெண்களுக்கு பிறக்கும் குழந்தைகள், மாற்றுத்திறனாளி குழந்தைகள், பஞ்சம், பெருந்தொற்று நோய் போன்ற பல்வேறு காரணங்கள் உள்ளன. பெண் குழந்தைகள் பிறப்பு மீதான குறைந்த மதிப்பு மற்றும் ஆண் குழந்தைகள் மீதான விருப்பமும் பெண்சிசுக்களை அறிந்தே கொல்லும் நிலையினை ஏற்படுத்தி உள்ளது.
3. பெண் குழந்தைகள் பெற்றோரால் கைவிடப்பட்டாலும், அவர்களுக்கு சரியான பராமரிப்பும் ஆதரவும் கிடைப்பதை உறுதிசெய்ய, தமிழக அரசு 1992-ஆம் ஆண்டு சேலம் மாவட்டத்தில் தொட்டில் குழந்தைத் திட்டம் என்ற புதிய திட்டத்தை அறிமுகம் செய்தது. மருத்துவமனைகளில் தொட்டில்களை அமைப்பதன் மூலம், தாய்மார்கள் தாங்கள் விரும்பாத பெண் குழந்தைகளை தொட்டில்களில் பாதுகாப்பாக விட்டுச் செல்ல வசதி செய்யப்பட்டுள்ளது. இது குழந்தைகளை மரணத்தின் பிடியில் இருந்து மீட்பதற்கும், பெண் குழந்தைகளின் உண்மையான மதிப்பை மேம்படுத்துவதற்கும் ஒரு தனித்துவமான நடவடிக்கையாகும்.
4. இத்திட்டத்தின் கீழ், பெண் குழந்தைகளையும் மற்றும் மாற்றுத்திறனாளி குழந்தைகளையும், வறுமை மற்றும் பராமரிக்க விருப்பமின்மை பெற்றோர்கள் தாமாக முன்வந்து குழந்தைகளை தொட்டிலில் விட்டுச் செல்ல இத்திட்டம் வழிவகை செய்கிறது. அவ்வாறு பெறப்பட்ட குழந்தைகள், உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் சட்டப்பூர்வமாக தத்து கொடுக்கப்படுகின்றனர்.
5. 2001 ஆம் ஆண்டில், பெண் சிசுக்கொலை வழக்கத்திலிருந்த மதுரை, தேனி, திண்டுக்கல் மற்றும் தருமபுரி மாவட்டங்களுக்கும் இந்தத் திட்டம் நீட்டிக்கப்பட்டது.)
6. 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, குழந்தை பாலின விகிதம் குறைவாகப் பதிவான கடலூர், அரியலூர், பெரம்பலூர், விழுப்புரம் மற்றும் திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களுக்கு 2011-ல் இந்தத் திட்டம் மேலும் விரிவுபடுத்தப்பட்டது. அதன்படி, சம்மந்தப்பட்ட மாவட்டங்களில் வரவேற்பு மையங்கள் தொடங்கப்பட்டன. மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், குழந்தைகள் இல்லங்கள் மற்றும் காப்பகங்களில் வைக்கப்பட்டுள்ள தொட்டில்கள் மூலம் பெற்றோர்களால் கைவிடப்பட்ட குழந்தைகள் பெறப்படுகின்றனர்.
7. பெண் சிசுக்கொலை எனும் தீய பழக்கத்தை தடுக்கவும், குறைந்து வரும் குழந்தை பாலின விகிதத்தை சரிசெய்யவும், நிர்வாக இயந்திரத்திற்கு அதிகப் பொறுப்பளித்து சட்டத்தை முழுவீச்சில் செயல்படுத்தியும் குற்றவாளிகளை தண்டிக்கவும் தமிழ்நாடு அரசு தீவிர முயற்சி எடுத்து வருகிறது. திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து மார்ச் 2022 வரை மொத்தம் 5781 குழந்தைகள் (ஆண் 1283, பெண் 4498) பெறப்பட்டுள்ளனர்.

### 2. முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம்

ஒரு நாட்டின் எதிர்காலம் பாலின சமத்துவத்தை உறுதி செய்வதன் மூலம், பெண் குழந்தைகளும் போதுமான பிரதிநிதித்துவத்துடன், தகுதி பெற்று, வளர்ச்சியின் பாதையில் பங்கேற்க இயலும். பாலின சமத்துவம் என்பது ஆண் மற்றும் பெண் குழந்தைகள்

இருபாலருக்கும் கல்வி, மருத்துவம், பொருளாதாரம் மற்றும் அரசியல் உள்ளிட்டவற்றில் சமவாய்ப்புகளை வழங்குவதாகும். ஆணாதிக்கம் மிகுந்த சமூகத்தில் பெண் குழந்தைகள் பாலின பாகுபாடுகளுக்கு ஆளாவதுடன் இந்நாளிலும் சுமையாக கருதப்படுகின்றனர். எனவே, பெண் குழந்தைகளுக்கு கல்வி கற்பித்து அதிகாரம் அளித்து அவர்களை மேம்படுத்த அரசு உரிய நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது.

பெண் சிசுக்கொலையை ஒழித்திடவும், ஆண் குழந்தைகளை விரும்பும் போக்கை மட்டுப்படுத்திடவும் குடும்பக் கட்டுப்பாட்டை ஊக்கப்படுத்திடவும் தமிழ்நாடு அரசு, பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தை செயல்படுத்தி, பெண் குழந்தைகளின் நலனை பாதுகாக்கிறது.

முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம் 1992-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. பெண் குழந்தைகளின் கல்வியை உறுதி செய்திடவும் மற்றும் அவர்களின் உரிமைகளை காத்திடவும் அரசால் அக்குழந்தைகளின் பெயரில் நேரடியாக வைப்பு நிதி முதலீடு செய்யும் இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் பெண் குழந்தைகளின் பெயரில் நிலையான வைப்புத்தொகை ''தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில்'' முதலீடு செய்யப்படுகிறது. இந்த வைப்புத்தொகையின் ரசீது நகல் பெண் குழந்தையின் குடும்பத்திற்கு வழங்கப்படுகிறது. பெண் குழந்தைக்கு 18 வயது நிறைவடைந்ததும், திரண்ட வட்டி விகிதத்துடன் கூடிய வைப்பு தொகை முதிர்வு தொகையாக உயர்கல்வி பயில வழங்கப்படுகிறது.

**திட்டத்தின் நோக்கங்கள்**

- பெண் குழந்தைகள் குறைந்தபட்சம் 10-ஆம் வகுப்பு வரை கல்வி பெறுவதை உறுதி செய்தல் பின் உயர்கல்வி பெறவும் ஊக்குவித்தல்.
- 18 வயதிற்கு பிறகு திருமணம் செய்து கொள்ளும் மனப்பாங்கினை பெண் குழந்தைகளிடம் ஊக்குவித்தல்.
- இரண்டு பெண் குழந்தைகளுடன் குடும்ப கட்டுப்பாடு செய்து கொள்ள பெற்றோர்களை ஊக்குவித்தல்.
- பெண் குழந்தைகளுக்கு அதிகாரம் அளிக்கும் திறன்களை மேம்படுத்த குடும்பத்தின் பங்களிப்பை உறுதி செய்தல்.
- பெண் குழந்தைகளின் உரிமைகளை பாதுகாத்தல் மற்றும் சமூக பொருளாதார மேம்பாடு வழங்குதல்.

**திட்டத்தின் வகைகள்**

**திட்டம்-1**

இத்திட்டத்தின் கீழ் ஒரு குடும்பத்தில் ஒரு பெண் குழந்தை மட்டும் பிறந்து இருப்பின், அப்பெண் குழந்தையின் பெயரில் நிலையான வைப்புத் தொகையாக ரூ.50,000/- தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் முதலீடு செய்யப்படுகிறது. இந்த வைப்புத் தொகையின் இரசீது நகல் பெண் குழந்தையின் குடும்பத்திற்கு வழங்கப்படுகிறது.

**திட்டம்-II**

இத்திட்டத்தின் கீழ் ஒரு குடும்பத்தில் இரண்டு பெண் குழந்தைகள் மட்டும் இருக்கும் பட்சத்தில், ஒவ்வொரு பெண் குழந்தையின் பெயரிலும் நிலையான வைப்புத் தொகையாக தலா ரூ.25,000/தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் முதலீடு செய்யப்படுகிறது. இந்த வைப்புத் தொகையின் இரசீதுகளின் நகல்கள் பெண் குழந்தைகளின் குடும்பத்திற்கு வழங்கப்படுகிறது.

**திட்டத்தில் பயன் பெற தேவையான தகுதிகள்**

- குடும்பத்தில் ஒரே ஒரு பெண் குழந்தை/இரு பெண் குழந்தைகள் மட்டும் இருக்க வேண்டும். ஆண் குழந்தை இருக்கக்கூடாது, எதிர்காலத்தில் ஆண் குழந்தையை தத்தெடுக்கவும் கூடாது.
- பெற்றோரில் ஒருவர் 40 வயதிற்குள் கருத்தடை அறுவை சிகிச்சை மேற்கொண்டிருக்க வேண்டும்.
- விண்ணப்பிக்கும்போது குழந்தைகளின் பெற்றோர் தமிழ்நாட்டில் 10 ஆண்டுகள் தொடர்ந்து வசிப்பவராக இருக்க வேண்டும்.
- குடும்ப ஆண்டு வருமானம் ரூ.72,000/-க்குள் இருக்க வேண்டும். திட்டம்-1ல், குழந்தையின் 3 வயது முடிவதற்குள்ளும், திட்டம்-2ல் இரண்டாவது குழந்தையின் 3 வயது முடிவதற்குள்ளும் திட்டத்தில் பயன்பெற விண்ணப்பிக்க வேண்டும்.
- முதல் மற்றும் இரண்டாம் பிரசவங்களின்போது ஒன்றுக்கு மேற்பட்ட பெண் குழந்தைகள் இருப்பின், அவர்கள் திட்டம் 2-ன் கீழ் பயன் பெறுவர்.

**திட்டத்தின் பயனாளிகள்**

- இத்திட்டத்தின் கீழ் மார்ச் 2022 வரை 10,46,605 பெண் குழந்தைகள் பதிவு செய்யப்பட்டு ரூ.1705.52 கோடி தொகை வைப்பீடு செய்யப்பட்டுள்ளது. 2021-2022-ஆம் நிதியாண்டில், இத்திட்டத்தின் கீழ் 33,359 பெண் குழந்தைகள் பதிவு செய்யப்பட்டு ரூ.83.45 கோடி தொகை வைப்பீடு செய்யப்பட்டுள்ளது.
- 2015 முதல் மார்ச் 2021 வரை தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் 26,561 பெண் குழந்தைகளுக்கு ரூ.76.44 கோடி முதிர்வுத் தொகை வழங்கப்பட்டுள்ளது.
- அரசின் தொடர்ச்சியான சீரிய முயற்சியினால், 2021-22-ஆம் ஆண்டில் 30,114 பெண் குழந்தைகளுக்கு ரூ.90.18 கோடி முதிர்வுத் தொகை வழங்கப்பட்டுள்ளது.
- 2022-2023-ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.92.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**3. பெண் குழந்தைகளைக் காப்போம், பெண் குழந்தைகளுக்குக் கற்பிப்போம் திட்டம்**

''பெண் குழந்தைகளைக் காப்போம், பெண் குழந்தைகளுக்குக் கற்பிப்போம்'' திட்டம் பெண் குழந்தைகளுக்கான ஒன்றிய அரசு நிதியுதவி பெறும் திட்டமாகும். பெண் குழந்தைகள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தி அவர்களுக்கான நல திட்டங்களின் செயல்திறனை அதிகரிக்கவும் பாலின ரீதியில் கருக்கலைப்பு செய்தல், சிசுக்கொலை செய்தல் போன்ற சமூக கொடுமைகளிலிருந்து பெண் குழந்தைகளைக் காத்தல் மற்றும் நாடு முழுவதும் அவர்களின் கல்வி நிலையை மேம்படுத்துதல் இத்திட்டத்தின் நோக்கங்களாகும்.

இத்திட்டம், குழந்தை பாலின விகிதப்படி ஆண் குழந்தைகளை விட குறைவாக பெண் குழந்தைகள் உள்ளதாக கண்டறியப்பட்ட 11 மாவட்டங்களை இலக்காக கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. பயனாளிகளுக்கு நேரடியாக பணப்பலன்கள் ஏதுமின்றி சமூக மனமாற்றத்திற்கு உதவிடும் வகையில் விழிப்புணர்வு வழங்குவதை அடிப்படையாக கொண்டு இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

**திட்டத்தின் நோக்கங்கள்**

1. பாலினப்பாகுபாடு அடிப்படையில் பெண் குழந்தைகள் கொல்லப்படுவதை தடுத்தல்.
2. பெண் குழந்தை உயிர் வாழ்வதையும் அவர்களின் பாதுகாப்பையும் உறுதி செய்தல்.
3. பெண் குழந்தையின் கல்வியினை உறுதி செய்தல் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளில் அவர்களது பங்கேற்பினை மேம்படுத்துதல்.

**திட்டத்தின் செயல்பாடுகள்**

தமிழ்நாட்டில் 2015-ஆம் ஆண்டு முதல் கடலூர் மாவட்டத்தில் ''பெண் குழந்தைகளைக் காப்போம், பெண் குழந்தைகளுக்குக் கற்பிப்போம்'' திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டதை தொடர்ந்து, குழந்தை பாலின விகிதம் தேசிய சராசரியை விடக் குறைவாக இருந்த 10 மாவட்டங்களுக்கு 2018-ஆம் ஆண்டில் இத்திட்டம் மேலும் விரிவுபடுத்தப்பட்டது. (அரியலூர், தருமபுரி, நாமக்கல், சேலம், பெரம்பலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, திருவள்ளூர், திருச்சிராப்பள்ளி மற்றும் சென்னை). இந்த மாவட்டங்களில் பெண் குழந்தைகளின் முக்கியத்துவம் குறித்து அனைத்து நிலைகளிலும் பல துறைகளும் ஒருங்கிணைந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இத்திட்டம் ஒன்றிய அரசின் நிதி உதவியுடன் மேற்கண்ட 11 மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது. மேலும், ஒரு மாவட்டத்திற்கு ரூ.50.00 இலட்சம் வீதம் ரூ.5.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

மீதமுள்ள 27 மாவட்டங்களில், பெண் குழந்தைகளின் பிறப்பை ஊக்குவிப்பதற்கும், பாதுகாப்பை உறுதி செய்வதற்கும், பெண் குழந்தைகளின் கல்வியை மேம்படுத்துவதற்கும், தொலைத்தொடர்பு மற்றும் ஊடக செய்திகள் வாயிலாக இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

பல்வேறு துறை அலுவலர்களால் களப் பணியாளர்களுக்கு பயிற்சி அளித்தல், பாராட்டு கடிதம் வழங்குதல் மூலம் பெண் குழந்தை பிறப்பை கொண்டாடுதல், தாய்மார்களுக்கு சுகாதார பொருட்கள் வழங்குதல், மரக்கன்றுகள் வழங்குதல், பெண் மற்றும் ஆண் குழந்தைகளின் பிறப்பு எண்ணிக்கையை தெரிவிக்கும் தகவல்பலகை பராமரித்தல், கையெழுத்து

இயக்கம், மனித சங்கிலி, பேரணி, பள்ளி மற்றும் கல்லூரி மாணவ மாணவியரிடையே ஓவியப் போட்டி, கட்டுரை போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்குதல், சுவரொட்டிகள், பதாகைகள் ஆகியவற்றை அரசு அலுவலகங்கள் மற்றும் பொதுமக்கள் அதிகம் கூடுமிடங்களில் நிறுவுதல் ஆகிய செயல்பாடுகள் பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**4. குழந்தை திருமண தடைச் சட்டம், 2006**

குழந்தை திருமண தடைச் சட்டமானது இந்திய அரசால் 2006-ஆம் ஆண்டில் இயற்றப்பட்டது. இச்சட்டம் குழந்தை திருமணத்தை தடை செய்யவும், பாதிக்கப்பட்டவர்களை பாதுகாக்கவும், நிவாரணம் அளித்திடவும் குழந்தை திருமணத்திற்கு உடந்தையாக இருப்பவர்கள், ஊக்குவிப்பவர்கள் மற்றும் நடத்துபவர்களுக்கு கடுமையான தண்டனைகளை உறுதி செய்யவும் உகந்த வழிவகைகளை கொண்டிருக்கிறது. குழந்தை திருமணங்களை அறவே ஒழித்திட, தமிழ்நாடு குழந்தை திருமண தடுப்பு விதிகள், 2009 மாநில அரசால் உருவாக்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

**சட்டத்தின் முக்கிய அம்சங்கள்**

- ஆண்களுக்கு 21 வயது மற்றும் பெண்களுக்கு 18 வயது என்பதை திருமண வயதாக இச்சட்டம் குறிப்பிடுகிறது.
- இச்சட்டத்தின்படி, குழந்தை திருமணம் என்பது தானாக நடவடிக்கை எடுக்கத்தக்க மற்றும் பிணையில் விடுவிக்க இயலாத குற்றமாகும்.
- குழந்தை திருமணம் என்பது செல்லதக்கதல்ல மற்றும் இரத்து செய்யப்படக் கூடியது.
- குழந்தை திருமணத்தால் பாதிக்கப்படும் குழந்தைகளுக்கு பராமரிப்பு மற்றும் இருப்பிடம் வழங்கிட சட்டத்தில் வழிவகை உள்ளது.
- குழந்தை திருமணங்கள் நடைபெறாமல் தடுக்க நீதிமன்றங்கள் தடை உத்தரவுகளை வழங்கலாம்.

**சட்டத்தின் கீழ் தண்டனை விவரம்**

- 18 வயதிற்கு மேற்பட்ட ஆண்கள், குழந்தை திருமணத்தில் ஈடுபட்டால் அவருக்கு 2 ஆண்டுகள் வரை கடுங்காவல் சிறைத் தண்ட னை அல்லது ரூ.1,00,000/- (ஒரு இலட்சம்) வரை அபராதம் அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும்.
- குழந்தை திருமணத்தை ஏற்பாடு செய்பவர், நடத்துபவர், வழிநடத்துபவர் மற்றும் உடந்தையாக இருப்பவர்களுக்கும் 2 ஆண்டுகள் வரை கடுங்காவல் சிறைத்தண்டனை மற்றும் ரூ.1,00,000/- (ஒரு இலட்சம்) வரை அபராதம் விதிக்கப்படும்.
- குழந்தைக்கு பொறுப்பாக இருப்பவர், பெற்றோர், பாதுகாவலர் அல்லது சங்கங்களின் உறுப்பினர், குழந்தை திருமணங்களை ஊக்குவிப்பவர், நடத்துவதற்கு அனுமதி அளிப்பவர், நடைபெறுவதனை தடுக்க தவறுபவர், குழந்தை திருமணத்தில் கலந்து கொள்பவர் அல்லது பங்கேற்பவர் எவராக இருப்பினும் சட்டத்தின்படி 2 ஆண்டுகள் வரை கடுங்காவல் சிறைத்தண்டனை மற்றும் ரூ.1,00,000/- வரை அபராதம் விதிக்கப்படும். இருப்பினும் பெண்களுக்கு இச்சட்டத்தின் கீழ் சிறைத்தண்டனை வழங்கிட இயலாது.

**5. பெண்களுக்கு அரசு பேருந்தில் கட்டணமில்லா பயணம்**

1. பணிபுரியும் மகளிர், உயர்கல்வி பயிலும் மாணவியர்கள் உட்பட அனைத்து மகளிரின் பாதுகாப்பான பயணத்தினை உறுதி செய்யும் வகையில், தமிழ்நாடு போக்குவரத்துக் கழக கட்டுப்பாட்டில் இயங்கும் சாதாரண கட்டண நகர பேருந்துகளில் கட்டணமில்லா பயண வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.
2. பாதுகாப்பான பயணம் என்பது பெண்களின் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும். பிறரை சார்ந்திராமல் பெண்கள் கல்விக் கூடங்களுக்கும், கல்லூரிகளுக்கும், வேலை செய்யும் இடங்களுக்கும் தாமாகவே சென்று வருவதால் கட்டணமில்லா பேருந்து வசதி மிகப் பெரிய தாக்கத்தை சமூகத்தில் ஏற்படுத்தியுள்ளது. பெண்களின் பயணத்திற்கான அன்றாட செலவுகள் குறைக்கப்பட்டு, கல்வி, உணவு மற்றும் உடை போன்ற அத்தியாவசிய செலவுகளை அவர்கள் மேற்கொள்வதற்கு இது ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.
3. இத்திட்டத்தின் கீழ் பணிபுரியும் மகளிர் மற்றும் உயர்கல்வி பயிலும் மாணவிகள் உள்ளிட்ட அனைத்து மகளிரும் சுமார் 91.85 கோடி பாதுகாப்பான பயணங்களை மேற்கொண்டுள்ளனர்.

**6. திருமண நிதியுதவித் திட்டம்**

தமிழக அரசால் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திருமண நிதியுதவித் திட்டங்கள், பெண் கல்வியை உறுதி செய்தல், குழந்தை திருமணத்தை தடுத்தல், விதவை மறுமணம் மற்றும் கலப்பு திருமணங்களை ஊக்குவித்தல் ஆகிய நோக்கங்களுக்காக அறிமுகப்படுத்தப்பட்டன.

**1. டாக்டர். முத்துலெட்சுமி ரெட்டி அம்மையார் நினைவு கலப்பு திருமண நிதியுதவித் திட்டம்**

சமுதாயத்தில் காணப்படும் சாதி வேறுபாடு மற்றும் வரதட்சணைக் கொடுமைகளை களையும் பொருட்டு, கலப்புத் திருமணங்களுக்கு நிதியுதவி அளித்து ஊக்கப்படுத்த 1968 முதல் செயல்பட்டு வருகிறது.

**2. டாக்டர். தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண நிதியுதவித் திட்டம்**

1975-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு விதவை மறுமணத்தினை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**3. ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு விதவை மகள் திருமண நிதியுதவித் திட்டம்**

ஏழை கைம்பெண் தாய்மார்களின் துயர் தீர்க்கும் வகையில் அவர்களது மகளின் திருமணத்தை நடத்த உதவும் நோக்கில் 1982-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**4. அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண் திருமண நிதியுதவித் திட்டம்**

தாய் மற்றும் தந்தையை இழந்த ஆதரவற்ற பெண்கள், திருமணம் செய்து கொள்ள உதவி செய்திடும் வகையில் 1985-ஆம் ஆண்டு அரசால் துவங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டம், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதித் திட்டம் என மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

**திருமண நிதியுதவித் திட்டங்களில் பயன் பெறுவதற்கான தகுதிகள்:**

| திருமண நிதி உதவித் திட்டத்தின் பெயர் | ஆண்டு வருமான வரம்பு (ரூ) | குறைந்த பட்ச வயது வரம்பு | கல்வித் தகுதி | விண்ணப்பம் சமர்ப்பிக்க வேண்டிய கால அளவு |
|---|---|---|---|---|
| 1. டாக்டர் முத்து லெட்சுமி ரெட்டி நினைவு கலப்புத் திருமண நிதியுதவித் திட்டம் திட்ட ம் –I: ஆதிதிராவிடர் /பழங்குடியினர் மற்றும் பிறஇனத்தவர் திட்ட ம் II: முற்பட்ட வகுப்பினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு/மிகவும் பிற்படுத்தப் பட்டவகுப்பு | வருமான வரம்பு இல்லை | மணமகள் – 18 வயது மணமகன் – 21 வயது | குறைந்த பட்சம் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பழங்குடியினர் -5ம் வகுப்பு | திருமணம் முடிந்த இரண்டு ஆண்டிற்குள் |
| 2. டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண நிதியுதவித் திட்டம் | வருமான வரம்பு இல்லை | மணமகள் – 20 வயது மணமகன் – 40 வயது (அதிக பட்சம்) | இல்லை | மறுமணம் முடிந்த 6 மாதக் காலத்திற்குள் |
| 3, ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு விதவை மகள் திருமண | ரூ.72,000 | மணமகள் – 18 வயது மணமகன் – 21 வயது | இல்லை | விண்ணப்பங்களை திருமணத்திற்கு 40 நாட்களுக்கு முன்பாக அளிக்க வேண்டும். சிறப்பு |

| | | | | |
|---|---|---|---|---|
| நிதியுதவித் திட்டம் | | | | நேர்வுகளில், தக்க காரணங்கள் இருந்தால், திருமணத்திற்கு முதல் நாள் வரை மனுக்களை ஏற்றுக்கொள்ளலாம். |
| 4. அன்னை தெரசா அம்மையார் நினைவு ஆதரவற்ற பெண் திருமண நிதியுதவித் திட்டம் | வருமான வரம்பு இல்லை | மணமகள் – 18 வயது மணமகன் – 21 வயது | இல்லை | திருமணத்திற்கு 40 நாட்களுக்கு முன்பு விண்ணப்பிக்க வேண்டும். சிறப்பு நேர்வுகளில், தக்க காரணங்கள் இருந்தால், திருமணத்திற்கு முதல் நாள் வரை மனுக்களை ஏற்றுக்கொள்ளலாம். |

ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு விதவை மகள் திருமண நிதியுதவித் திட்டம், அன்னை தெரசா அம்மையார் நினைவு ஆதரவற்ற பெண் திருமண நிதியுதவித் திட்டம் ஆகிய திருமண உதவித் திட்டங்களில், 8 கிராம் தங்க நாணயத்துடன் பட்டம்/பட்டயம் பெற்றவர்களுக்கு ரூ.50,000/-, ஏனையோருக்கு ரூ.25,000/ நிதியுதவியாக வழங்கப்படுகிறது.

டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண நிதியுதவித் திட்டம் மற்றும் டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி நினைவு கலப்புத் திருமண நிதியுதவித் திட்டங்களின் கீழ், 8 கிராம் தங்க நாணயத்துடன் பட்டதாரி அல்லாதோருக்கான நிதியுதவித் தொகையான ரூ.25,000/-ல், மின்ன ணு பரிமாற்றம் மூலம் ரூ.15,000/- மற்றும் தேசிய சேமிப்பு பத்திரமாக ரூ.10,000/- பட்டம் / பட்டயம் பெற்றோருக்கான நிதியுதவி தொகை ரூ.50,000/-ல், மின்ன ணு பரிமாற்றம் மூலம் ரூ.30,000/- மற்றும் தேசிய சேமிப்பு பத்திரமாக ரூ.20,000/-மும் வழங்கப்படுகிறது.

2021-2022-ஆம் நிதியாண்டில் மேற்படி திருமண நிதி உதவித் திட்டங்களின் கீழ் 94,700 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

2022-2023-ஆம் ஆண்டு வரவுசெலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.64.44 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**7. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதித் திட்டம்**

மாறிவரும் காலச் சூழ்நிலைகளுக்கேற்ப பொருளாதாரத்தில் பின்தங்கிய குடும்பங்களைச் சார்ந்த பெண்களின் உயர்கல்வியை உறுதி செய்யவும் தமிழ்நாட்டில் அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவிகளின் உயர்கல்விச் சேர்க்கை மிகக் குறைவாக இருப்பதைக் கருத்தில்கொண்டும், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர் கல்வி உறுதித் திட்டம் என்ற திட்டத்தினை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. பெண்களுக்குக் கல்வி வழங்குதல் என்பது பெண்களின் திறன்கள், அறிவு மற்றும் தன்னம்பிக்கையை வளர்க்கும் சிறந்த உற்பத்தி முதலீடு ஆதலால் அரசுப் பள்ளிகளில் 6-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரை பயின்று மேற்படிப்பில் சேரும் மாணவிகளுக்கு, பட்டப்படிப்பு, பட்டயப்படிப்பு மற்றும் தொழிற்படிப்பு ஆகியவற்றில் இடைநிற்றல் இன்றி முடிக்கும் வரை மாதம் ரூ.1,000 நேரடியாக அவர்கள் வங்கிக் கணக்கிற்கு செலுத்தப்படும்.

மாணவிகள் ஏற்கனவே பிற கல்வி உதவித் தொகை பெற்று வந்தாலும் இந்த புதிய திட்டத்தின் கீழ் ஊக்கத் தொகையையும் பெற இயலும். இத்திட்டத்தின் மூலம் சுமார் 6 இலட்சம் மாணவிகள் ஒவ்வொரு ஆண்டும் பயன்பெற வாய்ப்புள்ளது.

2022-2023-ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.697.78 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**8. குறுகிய கால தங்கும் இல்லம்**

ஒன்றிய அரசு 2016-ஆம் ஆண்டில் 'ஸ்வதார்' மற்றும் 'குறுகிய கால தங்கும் இல்லங்கள்' ஆகிய இரண்டு திட்டங்களை ஒன்றிணைத்து ''குறுகிய கால தங்கும் இல்லங்கள்'' என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியது. சமூக பாதுகாப்பு இயக்குநரகத்தின் கீழ் செயல்பட்டு வந்த இந்த இல்லங்கள் சமூக நல இயக்குநரகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டு செயல்பாட்டில் உள்ளது.

இத்திட்டமானது இக்கட்டான சூழ்நிலையில் உள்ள பெண்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் நோக்கத்துடன் தங்குமிடம், உணவு, உடை, ஆலோசனை, பயிற்சி, மருத்துவம் மற்றும் சட்ட உதவி போன்றவற்றை வழங்குகிறது.

தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் ஒரு குறுகிய கால தங்கும் இல்லத்தில் 30 பெண்கள் அதிகபட்சம் 5 ஆண்டுகள் வரை தங்கலாம். 60 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் முதியோர் இல்லங்களுக்கு மாற்றப்படுவார்கள். இந்த இல்லங்களில் 12 வயது வரை ஆண் குழந்தைகளும், 18 வயது வரை பெண் குழந்தைகளும் தங்கள் தாயுடன் தங்கி பயனடையலாம்.

ஒன்றிய மற்றும் மாநில அரசுகளுக்கு இடையே முறையே 60:40 என்ற நிதிப் பங்களிப்பில் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

2022-2023-ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.5.58 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**9. மகளிர் சக்தி மையம்**

மகளிர் சக்தி மையம் எனும் இத்திட்டம் ஒன்றிய அரசால் 2017-18 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. கிராமப்புற மகளிர் மேம்பாட்டிற்காக அரசு நலத்திட்டங்கள், திறன் பயிற்சிகள், அடிப்படை சட்ட உதவிகள், கல்வியறிவு, சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை மகளிர் சக்தி மையம் மேற்கொள்கிறது.

இத்திட்டத்திற்கான நிதியானது, ஒன்றிய மற்றும் மாநில அரசுகளால் 60: 40 என்ற விகித அடிப்படையில் பகிர்ந்து அளிக்கப்படுகிறது. இத்திட்டம் மாநில, மாவட்ட மற்றும் வட்டார அளவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**10. மாநில பெண்கள் வள மையம்**

மாநில பெண்கள் வள மையமானது, பெண்களை மையமாகக் கொண்ட ஒருங்கிணைந்த சேவை மையம், பெண்கள் உதவி மையம் போன்ற திட்டங்கள் சிறப்பாக செயல்படுவதற்கான தொழில்நுட்ப ஆலோசனை, மகளிரை பாதிக்கக்கூடிய பிரச்சினைகள் குறித்த ஆய்வுகள் மற்றும் பெண்கள் சம்பந்தமான அரசு திட்டங்கள், கொள்கைகள், சட்டங்கள் குறித்து ஆய்வு மற்றும் மதிப்பீடு செய்து அரசு துறைக்கு பொருத்தமான பரிந்துரைகளை மாநில அளவில் வழங்கி வருகிறது.

2022- 2023 ஆம் ஆண்டு வரவு- செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ38.90 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**11. மகளிர் உதவி எண் – 181**

2018 நவம்பர் முதல் ஒன்றிய அரசின் 100% நிதியுதவியுடன் நாடு முழுவதும் ஒரே சீரான மகளிர் உதவி எண் - 181 ஏற்படுத்தப்பட்டுள்ளது. வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களின் 24 மணி நேர உடனடி மற்றும் அவசர கால அழைப்பை ஏற்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். பல்வேறு துறைகள் மூலம் செயல்படுத்தப்படும் பெண்களுக்கான அரசின் திட்டங்கள் குறித்த விவரங்களை, தகவல் கோரும் பெண்களுக்கு இம்மையம் அளித்து வருகிறது. 2021-22-ஆம்

ஆண்டில் தொடர் செலவினமாக ஒன்றிய அரசால் ரூ.50.53 இலட்சம் மகளிர் உதவி மையத்திற்கு ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

மகளிர் உதவி எண் தற்போது சிறுசேரி சிப்காட் தொழிற்பேட்டையில் ஆம்டெக்ஸ் நிறுவனம் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**12. நிர்பயா நிதி**

பெண்களுக்கு பாதுகாப்பான சூழலை உருவாக்கிடும் நோக்கில் 2016-ஆம் ஆண்டில் ஒன்றிய உள்துறை அமைச்சகம் மூலம் நிர்பயா நிதி ஏற்படுத்தப்பட்டது. நாட்டில் சென்னை உட்பட 8 நகரங்களில், பெண்களின் பாதுகாப்பிற்காக, இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. சென்னை பெருநகர மாநகராட்சிக்கு ரூ.425.06 கோடி மதிப்பில் பெருநகர சென்னை காவல் துறை, பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை மாநகர போக்குவரத்து துறை மற்றும் சமூக நலத்துறை ஆகிய நான்கு துறைகள் மூலம் 12 திட்டங்களை செயல்படுத்திட ஒன்றிய அரசால் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டது. இந்நிதி 60:40 என்ற விகிதத்தில், ஒன்றிய, மாநில அரசுகளின் பங்களிப்புடன் 2018-19-ஆம் ஆண்டு முதல் துறைகளுக்கு பகிர்ந்து வழங்கப்பட்டு, செலவினம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை மூலம் மகளிர் உதவி எண் சேவையினை வலுப்படுத்திட ரூ.12.96 கோடி இத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, ரூ.9.72 கோடி 2021-2022-ஆம் ஆண்டு வரை பெறப்பட்டது. கூடுதல் பணியாளர்களுடன் 24 மணி நேரமும் செயல்படும் வகையில் பெண்கள் உதவி எண் சேவையினை தரம் உயர்த்திடவும், மூன்று ஆண்டுகளுக்கு அச்சேவையினை செயல்படுத்திடவும், ஒரு தனியார் நிறுவனத்திடம் ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், பெண்கள் உதவி எண்ணிற்கு சிறப்பு வலைத்தளம் உருவாக்கப்பட்டு தகவல் பரிமாற்றம் செய்யும் வசதி, பாதிக்கப்பட்ட பெண்கள் டெலிகான்பரன்ஸ்ங் மூலம் தமக்கு தேவையான சட்ட உதவி, ஆலோசனைகள், காவல்துறை, மருத்துவ உதவி ஆகியவற்றை பெறவும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**13. குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம், 2005**

2005-ஆம் ஆண்டின் குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டத்தில், பெண்கள் பாதுகாப்பாக வன்முறை இல்லாத குடும்பத்தில் வசிப்பதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. இச்சட்டம் பெண்கள் உரிமையோடு தங்கள் புகுந்த வீட்டில் வாழ்வதற்கான உரிமையையும், அவர்தம் குழந்தைகளுக்கான பாதுகாப்பு மற்றும் பராமரிப்பையும் வழங்குகிறது.

**இச்சட்டத்தின் சிறப்பு அம்சங்கள்**

- பாதிக்கப்பட்ட நபர்களிடையே மற்ற வழக்கு விசாரணைகள் நிலுவையிலிருந்த போதிலும் குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம், 2005ன் கீழ் வழக்குகளை பதிவு செய்யலாம்.
- ஒரேவழக்கில் பல தீர்ப்புகளை பெற இச்சட்டம் வழிவகை செய்துள்ளது
- வார்த்தைகள் மற்றும் மனரீதியான கொடுமைகளுக்கும் நிவாரணம் அளிக்கிறது.
- குற்றவியல் அமர்வு நீதிமன்றத்தின் ஆணையினை எதிர்த்து 30 நாட்களுக்குள் எதிர்மனுதாரர் மனுதாரர் மற்றும் மேல்முறையீடு செய்யலாம்.

**14. வரதட்சணை தடுப்புச் சட்டம், 1961**

- வரதட்சணை தடுப்புச் சட்டம் 1961ஆம் ஆண்டு இயற்றப்பட்டதை தொடர்ந்து தமிழ்நாடு வரதட்சணை தடுப்பு விதிகள், 2004ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.
- இச்சட்டமானது 1989ல் திருத்தம் செய்யப்பட்டு, வரதட்சணை தடுப்பு விதிகள், 2004-ன் படி மாவட்ட சமூக நல அலுவலர்களை வரதட்சணை தடுப்பு அலுவலர்களாக நியமனம் செய்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

- காவல்துறை/ நீதிமன்றம், மாவட்ட சமூக நல அலுவலர்களிடமிருந்து உண்மையான அறிக்கையை பெற்ற பிறகு வழக்கை பதிவு செய்கிறது.
- ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் நாள் வரதட்சணை தடுப்பு தினமாக அனுசரிக்கப்படுகிறது.

**வரதட்சணை தடுப்புச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகள்**

| வ. எண். | விவரம் | 2006 - 2021 |
|---|---|---|
| 1 | மாவட்ட சமூக நல அலுவலரால் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் | 14,447 |
| 2 | ஆற்றுப்படுத்துதல் மூலம் சுமூகமாக தீர்க்கப்பட்ட வழக்குகள் | 11,331 |
| 3 | மாவட்ட சமூக நல அலுவலரால் காவல்துறைக்கு பரிந்துரைக்கப்பட்ட வழக்குகள் | 2,438 |
| 4 | மாவட்ட சமூக நல அலுவலரின் விசாரணையில் உள்ள வழக்குகள். | 678 |

**15. பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலச் சட்டம், 2007**

பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்களின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு இச்சட்டத்தின் மூலம் உறுதி செய்யப்படுகிறது. தமிழ்நாடு அரசு, இச்சட்டத்தின் கீழ் மாநில விதிகளை 31.12.2009 அன்று வெளியிட்டுள்ளது.

பெற்றோர்கள் மற்றும் மூத்த குடிமக்களைப் பராமரிப்பது அவர்களின் குழந்தைகள் மற்றும் சட்டப்பூர்வ வாரிசுகளின் கடமையாகும். மூத்த குடிமக்களின் உடல் நலம், மனநலம் மற்றும் சொத்துக்கள் தொடர்பான பிரச்சனைகளுக்கு, பராமரிப்பு தீர்ப்பாயங்கள் மூலம் நிவாரணம் பெற இச்சட்டம் வழிவகை செய்கிறது.

**சட்டத்தின் சிறப்பம்சங்கள்**

ஒரு மூத்த குடிமகன் அல்லது பெற்றோர், தனது வருமானத்தில் இருந்தோ அல்லது அவருக்குச் சொந்தமான சொத்தில் இருந்தோ தன்னைப் பராமரிக்க முடியாத நிலையில், கீழ்க்கண்டவாறு உள்ள தனது குழந்தைகள்/ சட்டப்பூர்வ வாரிசுகளிடமிருந்து பராமரிப்புத் தொகையைப் பெற விண்ணப்பம் செய்ய உரிமை உண்டு:

- இச்சட்டம், மூத்த குடிமக்கள் மற்றும் ஈன்றெடுத்த, தத்தெடுத்த, மாற்றான் தந்தை அல்லது மாற்றான் தாய் ஆகியவர்களை உள்ளடக்கியது.
- குழந்தைகள் / சட்டப்பூர்வ வாரிசுகளால் பராமரிக்கப்படாமல் பாதிக்கப்பட்ட அனைத்து மூத்தக் குடிமக்களும் இச்சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள பராமரிப்பு தீர்ப்பாயங்களுக்கு மனு அளித்து அதிகபட்சம் ரூ.10,000/- வரை ஜீவனாம்சமாக பெற்றுக்கொள்ளலாம்.
- இச்சட்டத்தின் கீழ் ஜீவனாம்சம் கோரி பெறப்பட்ட விண்ணப்பங்கள் 90 நாட்களுக்குள் தீர்வு செய்யப்பட வேண்டும்.
- பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு வழங்கக்கூடிய பொறுப்பில் உள்ளவர் மூத்த குடிமக்களை கைவிட்டால் அவர்களுக்கு, 3 மாதங்கள் சிறை தண்டனை அல்லது ரூ.5,000/- வரை அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படும்.
- இச்சட்டம் நடைமுறைக்கு வந்த நாள் முதல் ஒரு பெற்றோர் அல்லது மூத்த குடிமகன் தங்களது பிள்ளைகள் அல்லது வாரிசுதாரர்கள் தங்களை பராமரிக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் சொத்துக்களை தானசெட்டில்மெண்ட் செய்த பின், அவர்கள் அதன்படி

நடக்காவிட்டால் பராமரிப்பு தீர்ப்பாயங்களில், அந்த தான செட்டில்மெண்டை ரத்து செய்யக் கோரி விண்ணப்பம் செய்யலாம்.

**16. மூத்த குடிமக்கள் உதவி எண் 14567**

இந்தியா முழுவதற்கும் பொதுவான, மூத்த குடிமக்கள் உதவி எண் ''14567'' ஒன்றிய அரசால் 28.04.2021 முதல் அனைத்து நாட்களிலும் காலை 8.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை சேவைகளை வழங்குவதற்காக தமிழ்நாடு அரசின் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை துறையின் ஒருங்கிணைப்புடன் தொடங்கப்பட்டது. முதியோர் உதவி எண்ணை இயக்கும் நிறுவனத்திற்கு 100 சதவீத நிதி உதவியை ஒன்றிய அரசு வழங்குகிறது. 2021-2022-ஆம் ஆண்டிற்கு ரூ.1.67 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மூத்த குடிமக்கள் உதவி எண் 14567-8 தொடர்பு கொள்ளும் மூத்த குடிமக்களுக்கு கீழ்காணும் சேவைகள் வழங்கப்படுகின்றன:-

1. மீட்பு உதவி
2. முதியோர் இல்லங்கள் பற்றிய தகவல்கள்
3. மூத்த குடிமக்கள் நலத்திட்டங்கள் பற்றிய தகவல்கள்
4. மனநல ஆலோசனை
5. தமிழ்நாடு பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலச் சட்டம், 2007 குறித்த சட்ட வழிகாட்டுதல்.

மார்ச் - 2022 வரை பெறப்பட்ட 43,781 அழைப்புகளில் 11,056 அழைப்புகள் மூத்த குடிமக்கள் தொடர்பான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய அழைப்புகளாகவும், மீதம் உள்ள 32,725 அழைப்புகள் திட்டம் தொடர்பில்லாத நடவடிக்கை எடுக்கத் தேவையற்ற அழைப்புகளாகவும், (எடுப்பதற்கு முன் துண்டிக்கப்பட்ட அழைப்புகள், தொந்தரவு தரும் அழைப்புகள், வழங்கப்படும் சேவைகள் தவிர பிற சேவைகள் குறித்து பெறப்படும் அழைப்புகள் மற்றும் முதியோர் அல்லாதவர்களிடமிருந்து பெறப்படும் அழைப்புகள்) பெறப்பட்டுள்ளது.

**17. மூத்த குடிமக்களுக்கான தேசிய செயல் திட்டம்**

மூத்த குடிமக்களின் நலனை உறுதி செய்வதற்காக, இந்திய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம் 2019-2025-ஆம் ஆண்டிற்கான, மூத்த குடிமக்களுக்கான தேசிய செயல் திட்டத்தை உருவாக்கியுள்ளது. இந்த செயல் திட்டம், தேசிய கொள்கை மற்றும் பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலச் சட்டம், 2007-ன் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளது. மூத்த குடிமக்களின் முன்னுரிமைகள் மற்றும் தேவைகளை நிறைவேற்ற, **இச்செயல் திட்டத்தில் பின்வரும் 10 கூறுகள் சேர்க்கப்பட்டுள்ளன:-**

1. நிதி பாதுகாப்பு
2. சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து
3. தங்குமிடம் மற்றும் முதியோர் நலன்
4. மூத்த குடிமக்களின் உயிர் மற்றும் உடைமைகளுக்கான பாதுகாப்பு
5. தலைமுறைகளுக்கிடையே பிணைப்புடன் கூடிய பயனுள்ள ஆக்கபூர்வமான முதுமை.
6. முதியோருக்கு ஏற்ற போக்குவரத்து வசதிகள் மற்றும் உகந்த சூழலை உருவாக்குதல்.
7. விழிப்புணர்வு மற்றும் திறன் மேம்பாடு.
8. சமுதாயத்தில் முதியோர் சார்ந்த பொருளாதார நடவடிக்கள், முதியோர்நேய உபகரணங்கள் மற்றும் சேவைகளை ஊக்குவித்தல்.
9. ஆராய்ச்சி மற்றும் ஆய்வு.
10. திட்ட மேலாண்மை

மூத்த குடிமக்களுக்கான தேசிய செயல் திட்டத்தை மாநில அளவில் செயல்படுத்திட, ரூ.1,18,00,000/- நிதி கீழ்க்கண்டவாறு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:-

| வ. எண் | திட்டங்கள் | நிதி ஒதுக்கீடு (ரூ.) |
|---|---|---|
| 1 | மூத்த குடிமக்களின் தரவுத்தளத்தை உருவாக்குதல் | 25,00,000 |
| 2 | மூத்த குடிமக்களுக்கான செயலியை உருவாக்குதல் | 15,00,000 |
| 3 | மூத்த குடிமக்களுக்கான விழிப்புணர்வு உருவாக்கும் திட்டம் | 33,00,000 |
| 4 | திறன் மேம்பாடு | 15,00,000 |
| 5 | நடமாடும் மருத்துவப் பிரிவு | 30,00,000 |
| **மொத்தம்** | | 1,18,00,000 |

**18. தமிழ்நாடு மாநில மூத்த குடிமக்களுக்கான வரைவு கொள்கை, 2022**

மூத்தக் குடிமக்கள் கண்ணியத்துடனும், பாதுகாப்புடனும் வாழ்வதற்கும் சுரண்டல் மற்றும் மன / உடல் ரீதியான துன்புறுத்தல்களிலிருந்து விடுபடுவதற்கான உரிமைகளை வலியுறுத்தி தமிழ்நாடு அரசு கடந்த ஆண்டு மூத்த குடிமக்களுக்கான தமிழ்நாடு மாநிலக் கொள்கை வகுக்கப்படும் **என** அறிவித்தது. ஹெல்ப் ஏஜ் இந்தியா, ஜே–பால் தெற்காசியா, தமிழ்நாடு மூத்தக் குடிமக்கள் மன்றங்கள், தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம், சென்னை சமூகப் பணி கல்லூரி போன்ற தொழில்நுட்ப பங்குதாரர்களுடன் இணைந்து தொடர் கூட்டங்கள், பட்டறைகள் மற்றும் ஆலோசனைகள் நடத்தப்பட்டுள்ளன. ஆலோசனை கூட்டங்களில் பல்வேறு விவாதங்களுக்குப் பிறகு, மூத்தக் குடிமக்கள் தொடர்பான தமிழ்நாடு மாநிலக் கொள்கை, 2022 குறித்த வரைவுக் கொள்கை உருவாக்கப்பட்டு, பொதுமக்கள் மற்றும் பிறரிடமிருந்து கருத்துக்களைப் பெறுவதற்காக இணைய தளத்தில் வெளியிடப்பட்டது. பெறப்பட்ட பரிந்துரைகள்/ கருத்துக்கள் பரிசீலிக்கப்பட்டு வரைவுக் கொள்கையில் சேர்க்கப்பட்டுள்ளன. மேலும், முதியோர் பராமரிப்பு பல்வேறு துறைகளால் கவனிக்கப்பட்டு வருவதால் சுகாதாரத்துறை, உள்துறை, போக்குவரத்துத் துறை, வருவாய்த் துறை போன்ற சார்பு துறைகளின் மதிப்புமிக்க உள்ளீடுகள், கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை பெறுவதற்காக, வரைவுக் கொள்கை அனுப்பப்பட்டுள்ளது. அவை பெறப்பட்டவுடன் வரைவுக் கொள்கை இறுதி செய்யப்பட்டு வெளியிடப்படும்.

மூத்த குடிமக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த, சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து, சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள், வாழ்வாதாரம்/ வருமானப் பாதுகாப்பு, வீட்டுவசதி மற்றும் சுற்றுச்சூழல், பாதுகாப்பு வழிமுறைகள், நிறுவன பராமரிப்பு, விழிப்புணர்வு மற்றும் கல்வி, ஆராய்ச்சி மற்றும் ஆவணப்படுத்துதல், பேரிடர் மேலாண்மை மற்றும் தணிப்பு மற்றும் மூத்தக் குடிமக்களுக்கான தனி இயக்குநரகத்தை உருவாக்குதல் போன்றவற்றில் மூத்த குடிமக்களுக்கான மாநில வரைவு கவனம் செலுத்துகிறது.

**19. திருநங்கையர் நலன்**

திருநங்கைகளும் இந்த சமுதாயத்தில் ஓர் அங்கம் என்பதை உணர்ந்து, இந்தியாவிலேயே முதல் மாநிலமாக ''தமிழ்நாடு திருநங்கைகள் நலவாரியத்தை'' 15-4-2008 அன்று தமிழ்நாடு அரசால் ஏற்படுத்தப்பட்டது. திருநங்கைகளின் நலன், சமூக பாதுகாப்பு, சமூக அங்கீகாரம் மற்றும் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

திருநங்கைகளின் நலனை மேம்படுத்தும் விதமாக, ''திருநங்கைகள்'' என்ற கைபேசி செயலி உருவாக்கப்பட்டு அவர்களது சுய விவரங்கள் பதிவு செய்யப்பட்டு அடையாள அட்டை பெறுவது எளிமையாக்கப்பட்டுள்ளது.

திருநங்கைகள் நலவாரியத்தின் மூலம் திருநங்கைகள் பின்வரும் சேவைகளை பெறுவதற்கு வழி வகை செய்யப்பட்டுள்ளது:-

- அடையாள அட்டை
- குடும்ப அட்டை
- வீட்டு மனை பட்டா
- குடியிருப்பு வீடுகள்
- தையல் இயந்திரம்
- உயர் கல்வி உதவித்தொகை
- சுய உதவி குழுக்கள் உருவாக்குதல்.
- திருநங்கையர் வாழ்வாதாரத்தினை உயர்த்திடும் வகையில் தொழில் செய்திட மானியத் தொகை ரூ.50,000/- வரை வழங்கப்பட்டு வருகிறது.

திருநங்கைகள் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ், 40 வயதிற்கு மேற்பட்ட திருநங்கையருக்கு மாதாந்திர ஓய்வூதியமாக ரூ.1000/- வீதம் வழங்கப்பட்டு வருகிறது. 2021-2022-ஆம் நிதியாண்டில் இத்திட்டத்தின் கீழ், 1071 திருநங்கையர் பயனடைந்துள்ளனர்.

திருநங்கையர்களில் தங்களுடைய தனித் திறமையால் பல்வேறு துறைகளில் முன்னேறியவர்கள் மற்றும் திருநங்கையர் நலனுக்காக சிறப்பாக பணியாற்றிய திருநங்கையர்களை ஊக்குவிக்கும் விதமாக, திருநங்கையர் தினமான ஏப்ரல் 15-அன்று ஒரு திருநங்கைக்கு ரூ.1,00,000/க்கான காசோலை மற்றும் சான்றிதழ் அடங்கிய மாநில அளவிலான ''திருநங்கைக்கான விருது'' 2020-ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், திருநங்கைகள் பாதுகாப்பான பயணம் மேற்கொள்வதற்கு ஏதுவாக சாதாரண கட்டண நகர பேருந்துகளில் கட்டணமில்லா பயண வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் சுமார் 5.27 இலட்சம் பயணங்களை திருநங்கைகள் மேற்கொண்டுள்ளனர்.

திருநங்கைகள் சுயதொழில் துவங்கிட மானியம் வழங்கும் திட்டத்தின் கீழ், முதற்கட்டமாக ரூ.72.55 இலட்சம் செலவினத்தில் 141 திருநங்கைகள் பயனடைந்துள்ளனர்.

திருநங்கைகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையிலும், திருநங்கைகளுக்கு வேலை வாய்ப்புகளை அதிகரிப்பதற்கும், 20 திருநங்கைகளுக்கு சென்னை அண்ணா மேலாண்மை நிறுவனம் மூலம் திறன் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

2022-2023-ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.6.19 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**20. தமிழ்நாடு மகளிர் ஆணையம்**

பெண்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பான மனுக்களை விசாரிக்கவும், பெண்களுக்கான உரிமைகளைப் பாதுகாத்திடவும் சட்டரீதியான அமைப்பான (Statutory Body) தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம் 2008-ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது.

பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை விசாரணை செய்து உடனடியாக தீர்வு காண இவ்வாணையத்திற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இவ்வாணையம் பெண்கள் தொடர்பான பிரச்சனைகளை ஆராய்ந்து உரிய தீர்வுகளை அரசுக்கு பரிந்துரைக்கிறது. மேலும், பெண்கள் தொடர்பான சமூக நீதி சட்டங்களான வரதட்சணை தடுப்புச் சட்டம் 1961, குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம் 2005, பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு சட்டம் 2007, பணிபுரியும் இடங்களில் ஏற்படும் பாலியல் வன்முறைகளிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் (தடுப்பு, தடை மற்றும் தீர்வு)சட்டம், 2013 ஆகிய சட்டங்கள் முறையாக செயல்படுத்தப்படுவதை இவ்வாணையம் உறுதி செய்கிறது.

மேலும், தேசிய மகளிர் ஆணையத்தின் உதவியோடு தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம் மாவட்டந்தோறும் பெண்களுக்கான சட்ட விழிப்புணர்வு முகாம்களை நடத்திவருகிறது. நடைப்பயணம், பேரணி போன்ற பல்வேறு சட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மாநில மற்றும் மாவட்ட அளவில் நடத்தப்படுகின்றன.

2022-2023-ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.102.81 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**21. தமிழ் நாடு சமூக நல வாரியம்**

தமிழ்நாட்டில் 1954-ஆம் ஆண்டில் துவக்கப்பட்ட தமிழ்நாடு சமூக நல வாரியம், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு நிதியுதவி அளித்து வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் பெண்கள் மற்றும் குழந்தைகளின் முன்னேற்றத்திற்காக செயல்படுகிறது. இவ்வாரியம், ஒன்றிய சமூக நல வாரியத்தின் திட்டங்கள் மற்றும் மாநில அரசின் திட்டங்கள் நன்முறையில் செயல்படுத்தப்படுவதை கண்காணித்தும் வருகிறது.

தமிழ்நாடு சமூக நல வாரியம் தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு உதவி செய்து பெண்களுக்கு கல்வி, பயிற்சி, விழிப்புணர்வு மற்றும் குடும்ப நல ஆலோசனை ஆகியவை வழங்கி வருகிறது.

2022-2023-ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.113.49 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**22. குடும்ப ஆலோசனை மையம் (மாநில அரசு நிதியுதவி)**

தம்பதிகளுக்கும் மற்றும் குடும்ப உறுப்பினர்களுக்கும் உரிய ஆலோசனைகள் வழங்கி, சமூகத்தின் அடிப்படை அங்கமான குடும்பங்கள் பிரிந்துவிடாமல் பாதுகாத்து, குடும்ப ஒற்றுமையை மேம்படுத்துவதே குடும்ப ஆலோசனை மையங்களின் நோக்கமாகும். தங்களது குடும்ப பிரச்சனைகளுக்கு தீர்வு காண விரும்புவோர் இம்மையங்களை அணுகலாம்.

குடும்ப வன்முறையால் பாதிக்கப்படும் பெண்கள், குழந்தைகள் மற்றும் குடும்ப உறுப்பினர்களுக்கு ஒவ்வொரு மையத்திலும் உள்ள இரண்டு தகுதி வாய்ந்த ஆலோசகர்கள் மூலம் ஆலோசனைகள் வழங்கியும், உரிய துறைகளுக்கு பரிந்துரைத்தும், குடும்ப ஆலோசனை மையம் செயல்பட்டு வருகின்றது.

வரதட்சணைக் கொடுமைகள், குடிப்பழக்கத்தால் ஏற்படும் குடும்ப பிரச்சனைகளால் பாதிக்கப்படும் பெண்களுக்கும் மற்றும் எய்ட்ஸ் நோயாளிகளுக்கும், இம்மையம் தக்க ஆலோசனைகளையும், உரிய வழிகாட்டுதல்களையும் வழங்கி உதவி வருகின்றது.

சென்னை, திருவள்ளூர், திருவாரூர், விழுப்புரம் மற்றும் சிவகங்கை ஆகிய மாவட்டங்களில் ஐந்து தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் நடத்தப்படும் ஒவ்வொரு குடும்ப ஆலோசனை மையத்திற்கும் மானிய உதவியாக தலா ரூ.1,80,000/- வீதம் தமிழ்நாடு சமூக நல வாரியம் மூலமாக வழங்கப்பட்டு வருகிறது.

2022-2023-ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.10.06 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**23. மாநில விருதுகள்**

**அவ்வையார் விருது**

அவ்வையார் விருது சமூக சீர்திருத்தம், மகளிர் மேம்பாடு, மதநல்லிணக்கம், மொழித்தொண்டு, கலை, அறிவியல், பண்பாடு, கலாச்சாரம், பத்திரிகை, நிருவாகம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் தொண்டாற்றும் மிக சிறந்து விளங்கும் மகளிருக்கு சர்வதேச மகளிர் தினமான மார்ச் 8-ம் தேதி அன்று ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்பட்டு வருகிறது. அவ்வையார் விருது பெறுபவர், 8 கிராம், எடையுள்ள எடையுள்ள தங்கப்பதக்கம், ரூ.1.00/- இலட்சம் காசோலை, சால்வை மற்றும் சான்று ஆகியவை வழங்கி கௌரவப்படுத்தப்படுகிறார்.

**பெண்களுக்காக சிறந்த சேவை புரிந்த நிறுவனத்திற்கான விருது மற்றும் சிறந்த சமூக சேவகர் விருது**

ஒவ்வொரு ஆண்டும், சுதந்திர தினத்தன்று, பெண்களுக்காக சிறப்பாக பணியாற்றிய சிறந்த சமூக சேவகர் மற்றும் பெண்களுக்காக சிறப்பாக தொண்டாற்றிய சிறந்த நிறுவனத்திற்கு சுதந்திர தின விருது வழங்கப்படுகிறது. சிறந்த சமூக சேவகர்களுக்கு 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம், சால்வை மற்றும் சான்று ஆகியவை வழங்கப்படுகின்றன. சிறந்த நிறுவனத்திற்கு ரூ.50,000/- ரொக்கப் பரிசுடன் சால்வை மற்றும் தங்கப் பதக்கமும் வழங்கப்படுகின்றன.